## தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை - 2015

---

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவண ஆக்கல் சேவை சபையின் சட்டத்த்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான விற்பனை நிலையத்தில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,744,946 தொகை பெறுமதியான இருப்பு, இறுதி இருப்புக்களுடன் உட்படுத்தியிருக்காமையால் நிதிக்கூற்றுக்களில் இறுதி இருப்பு அப்பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சீனா உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் இருந்து 2015 அக்தோபர் 23 திகதி கிடைத்திருந்த ரூபா 2,000,000 தொகைக்கான உதவி நிதி நிதிக்கூற்றுக்களில் மூலதன மானியங்கள் எனக் காட்டுவதற்குப் பதிலாக 16 கணினிகள் கொள்வனவு செய்வதற்காக வழங்குனர் ஒருவருக்கு செலுத்த வேண்டிய தொகை என ரூபா 1,894,400 தொகை மற்றும் ரூபா 105,600 தொகை மீளாய்வாண்டிற்காக வருமானம் எனவும் இனங்கண்டிருந்தது.

(இ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 27,916,840 தொகைக்கான அலுவலக தளபாடங்கள் உபகரணங்களின் பெறுமதியில் ரூபா 936,787 தொகை பெறுமதியான நடைமுறை சொத்துக்களின் இருப்பு ஒன்று உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நன்கொடைகளை ஆவணப்படுத்தும் மற்றும் கணக்கீடு செய்யும் கொள்கையொன்று இனங்கண்டிருக்காத காரணத்தினால் 2015 ஆண்டின் போது பல்வேறு செயற்திட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினரிடம் நன்கொடையாக சபைக்கு கிடைத்திருந்த அச்சு வெளியீடுகளை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

## 2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் 5 வகுப்புக்கள் சேர்ந்த சொத்துக்கள் தொடர்பாக காட்டப்பட்டிருந்த மீதி ரூபா 55,760,386 தொகையாக காணப்பட்டிருந்ததுடன், சொத்துக்கள் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், அம்மீதி ரூபா 40,816,500 தொகையாக காணப்பட்டமையால், ரூபா 14,943,886 இற்கான விளக்கமளிக்கப்படாத வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பண மீதி முற்பணம் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 640,625 தொகையாக இருந்ததுடன், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 619,242 தொகையாக காணப்படாமையால் ரூபா 21,383 இற்கான விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தக்காரர்களிடம் அறவீடு செய்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய 3 வருடங்கள் முதல் 11 வருடங்கள் வரை பழமையான ரூபா 240,651 தொகையான தடுத்து வைத்தல் வரி கணக்காய்வு சந்தர்ப்பமாகிய 2018 அக்தோபர் 01 திகதி வரை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பியிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 254,496 தொகைக்கான முற்பண மீதி 08 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் கணக்காய்வு சந்தர்ப்பமாகிய 2018 அக்தோபர் 01 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. இவற்றில் ரூபா 121,970 ஆன மீதி நிதிக்கூற்றுக்களில் இனங்காண முடியாத முற்பணம் எனக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2015 திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள இடர் கடன் மீதி ரூபா 12,200,290 தொகையாக காணப்பட்டதுடன், இடர் கடன் பதிவேட்டின் பிரகாரம், மீதி ரூபா 12,259,163 தொகையாக காணப்படாமையால், அதன்படி ஏற்பட்டிருந்த ரூபா 58,873 இற்கான வித்தியாசத்தினை இனங்காண முடியாத மீதியொன்று என நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டியவை எனக் காட்டப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நிதிப்பிரமாணம் 371 | தேவையினை சரியான முறையில் மதிப்பீடு செய்யப்படாமையால் குழுக் கூட்டங்கள் மற்றும் பல்வேறு கொள்வனவுகளுக்காக 13 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 160,500 தொகைக்கான முற்பணத் தொகையில் ரூபா 86,905 தொகை திருப்பி தீர்த்திருந்ததுடன், 18 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 148,425 இற்கான முற்பணத் தொகை செலவிடப்படாமல் மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. அவற்றில் 06 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த ரூபா 85,825 இற்கான தொகை, 10 நாட்கள் முதல் 29 நாட்கள் வரை இடைப்பட்ட காலம் கையில் தடுத்து வைத்து காரணத்தை குறிப்பிடாமல் மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2009 செப்டம்பர் 01 திகதிய டீஎம்ஏ/2009(2) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 662,766 பெறுமதியான இருப்பு மற்றும் ரூபா 1,306,631 கிரயத்தையுடைய சொத்துக்கள் 2015 திசெம்பர் 31 திகதியும், ரூபா 98,715,386 கிரயத்தையுடைய தேசிய புத்தகசாலை புத்தக இருப்பு 1976 முதல் 2015 வருடம் வரை 36 வருடங்களாக கணிப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | |
| | (i) பந்தி இலக்கம் 2(ஆ) | சொத்துக்களை இனங்காணல், கணக்கீடு செய்தல், அவற்றின் கட்டுப்பாட்டை இலகுவாக்குவதற்காக ஒவ்வொரு நிலையான சொத்துக்களுக்காகவும் திணைக்களம் சார் இலக்கத்துடனான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) பந்தி இலக்கம் 2(இ) | ஒவ்வொரு வகையான நிலையான சொத்துக்களுக்கு பேரேட்டு கணக்கு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) பந்தி இலக்கம் 2(உ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்துள்ள நிதி தரவுகள் நிலையான சொத்துப் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள நிதி தரவுகளுடன் இணக்கம் செய்யக் கூடிய விதமாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 இலக்கம் கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | கணினிகள், கணினி துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 10,185,344 இற்கான பற்றாக்குறை ஒன்றாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,383,674 தொகை ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,801,670 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான அரச மானியம் ரூபா 12,585,000 இனால் அதிகரித்திருந்த போதிலும் நிருவாகச் செலவுகள் ரூபா 19,194,535 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆண்டின் போது ரூபா 14,129,348 தொகையாக காணப்பட்ட பற்றாக்குறை மீளாய்வாண்டளவில் ரூபா 10,185,344 தொகை வரை இடையறாமல் குறைந்திருந்தது. எனினும், ஊழியர் வேதனம், நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2011 ஆண்டின் போது ரூபா 46,379,665 தொகையான சபையின் பங்களிப்பு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 86,052,111 தொகை வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயலாற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு தொகுதிகள் மற்றும் முகவுரை ஒன்றினை கொண்ட பன்சியபனஸ் ஜாதக புத்தகத்தை மீண்டும் அச்சிடுவதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும் அவ் அச்சிடும் வேலைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக புத்தகத்தின் அச்சிடுதல் அலுவல் சபையினால் மேற்கொள்வதற்காக 2015 ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், முகவுரை மற்றும் 2 தொகுதிகளை 2017 ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. தொகுதிகள் iii மற்றும் iv கணக்காய்வுத் திகதியாகிய 2018 அக்தோபர் 30 திகதி வரை அச்சிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1850 ஆண்டு வரை வெளியிடப்பட்டிருந்த பழைய கிரந்தப் பெயர்கள் மற்றும் 1851 முதல் 2000 முதல் ஆண்டு வரை அது தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த படைப்புக்களை உட்படுத்தி அதிகாரமுடைய கிரந்தப் பெயர் அட்டவணையை தொகுத்து வழங்குவதும் அலுவல்கள் 2014 ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தில் திட்டமிட்டு இருந்த போதிலும் கணக்காய்வு திகதியாகிய 2018 அக்தோபர் 30 வரையும் இந்த கருமம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விற்பனையின் பின்னர் பணம் செலுத்தும் அடிப்படையில் புதிதாக ஆசிரியர்களிடம் பெற்றிருந்த புத்தகங்களில் விற்பனை தொடர்பாக சபையின் தலைவர், பிரிவுக்கு பொறுப்பன பணிப்பாளர் மற்றும் நூலக மேம்பாட்டு தரப்படுத்தல் இனால் அடிக்கடி விலை மாற்றங்கள் ஏற்படுத்தியிருந்ததுடன், முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிலையான விலை கொள்கையொன்று சபையினால் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபையினால் 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை அச்சிடப்பட்டிருந்த ரூபா 2,392,489 தொகை பெறுமதியான சபையின் வெளியீடுகள் 3,187 இற்கான இருப்பு ஒன்று மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத வெளியீடுகள் 4,753 இற்கான தொகையொன்று கணக்காய்வு திகதியாகிய 2018 அக்தோபர் 30 திகதி அளவில் களஞ்சியத்தில் மற்றும் கிரந்த விஞ்ஞாபன கட்டுப்பாட்டு பிரிவில் மீதியாகக் காணப்பட்டது.

(இ) உயர் இலக்கிய படைப்புக்களை மீள அச்சிடுவதன் கீழ் புத்சரண கிரந்தத்தை பதிப்பித்தலின் கீழ் எழுத்துக்களை இணைக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு அச்சிடுவதற்காக 2013 திசெம்பர் 02 திகதி கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், திணைக்களத்தினால் எழுத்துக்களை இணைக்கும் அலுவல்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு அதனை மீண்டும் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. சபையினால் சரவைப் படி பரிசோதனை செய்த பின்னர் அதனை அச்சிடுவதற்கு அச்சகமொன்றிற்கு 2017 செப்டம்பர் 11 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியாகிய 2018 அக்தோபர் 30 ஆம் திகதி வரை அச்சிடும் அலுவல்கள் பூர்த்தி செய்த பதிவேட்டை திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை.

(ஈ) 2012 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட இருப்பு கணிப்பின் போது வாசகர் சேவை பிரிவில் 7,917 இற்கான குறைவு ஒன்று காணப்படுவதற்காக கணிப்பீட்டு சபையினால் கண்டறியப்பட்டிருந்தது. இது தொடர்பாக சபையினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் மூலம் 2,908 புத்தகங்களிள் கண்டுபிடிக்கப்பட்டிருந்த போதிலும், மேலும், காணப்பட்ட 5,009 புத்தகங்களின் குறைவு தொடர்பாக கணக்காய்வுத் திகதியான 2018 அக்தோபர் 30 திகதி வரையும் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(உ) அன்பளிப்பு நிறுவனங்கள் மற்றும் நபர்களினாலும் சபைக்கு அன்பளிப்பு செய்யப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்வேறு புத்தகங்களை ஏற்றுக்கொள்வதற்காக சபையின் செயன்முறை ஒன்று காணப்படாததுடன் இந்த வெளியீடுகளை முறையாக ஆவணப்படுத்துவது அல்லது அந்த சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்று ஏற்படுத்தியோ இருக்கவில்லை.

(ஊ) 2014 திசெம்பர் 31 திகதியில் அகற்றப்பட வேண்டும் என கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் இனங்கண்டிருந்த ரூபா 4,845,383 தொகை பெறுமதியான 154 நிலையான சொத்து விடயங்கள் 2015 வருட இறுதி வரையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 நிதியத்தின் குறை பயன்பாடு

பெறுகை திட்டத்தின் பிரகாரம் குறிப்பிட்ட காலப் பகுதியில் கொள்வனவு மேற்கொள்ளப்படாமையால் அதற்காக வழங்கப்பட்டிருந்த அரச மூலதன மானியங்கள் முற்றாக பயன்படுத்தப்படாமையால் 2015 ஜனவரி 01 திகதி உள்ளவாறு ரூபா 12,972,000 தொகைக்கான பயன்படுத்தப்படாத அரச மானிய மீதி 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 48,498,000 தொகை வரை அதிகரித்திருந்தது.

## 5 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்பித்தல்

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்று மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மற்றும் அதன் பிரதிகள்

உரிய அமைச்சுக்கு, திறைசேரி பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2 வருடங்கள் 6 மாதங்கள் தாமத்தின் பின்னர் 2018 செம்டம்பர் 7 திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது. மேலும், 2016 மற்றும் 2017 கணக்கு ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இவ் அறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

## 5.2 பெறுகை மற்றும் ஒப்பந்த வேலை செயன்முறை

### 5.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
பெறுகை திட்டம் தயாரிக்கும் போது சபையின் அவ்வவ் பிரிவுகளின் தேவைகளை இனங்கண்டு அடுத்த வருடத்திற்காக தயாரித்து முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெற வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டத்திற்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை 2015 ஏப்ரல் 10 திகதிக்கு பெற்றிருந்தது. அந்த பெறுகை திட்டமும் 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையில் பிரிவு 4.2.2 இன் பிரகாரம் பெறுகை செயற்பாடுகளின் படிமுறைகளை காட்டும் விதமாக தயாரித்திருக்கவில்லை.

### 5.2.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புதிய ஒருமுகப்படுத்தப்பட்ட வாயு சீராக்கி முறையை நிறுவுவதற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 40 மில்லியன் தொகை பெறுகை செய்து தேசிய போட்டியடிப்படையில் விலைமனு அழைப்பதற்கு பெறுகைகள் திட்டத்தில் திட்டமிட்டிருந்த போதிலும், முதலில் நேர் ஒப்பந்த வேலை முறையின் கீழ் மின்சார சபைக்கு ஒப்படைப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் விதப்புரைக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சு பெறுகை குழு அந்த விதப்புரையை இரத்து செய்து அதற்காக 2 மாதங்கள் அண்மித்த காலம் செலவிடப்பட்ட காரணத்தினால் ரூபா 40 மில்லியன் தொகைக்கான பாதீட்டு ஏற்பாடு 2015 திசெம்பர் 31 அளவில் கிடைத்திருந்த போதிலும் திட்டமிட்டிருந்தவாறு பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஆ) பெறுகை திட்டத்தின் பிரகாரம் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 2,000,000 தொகைக்கான இரண்டாம் மாடியில் மகளிர் ஆண்கள் கழிவறை முறையை திருத்துவதற்காக 2015 ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஜூலை மாதம் அளவில் முடிவாக்குவதற்கு எதிர்பார்த்த போதும் அந்த ஒப்பந்த வேலையை வழங்குவதற்கு 2015 நவம்பர் வரை தாமதமாகியிருந்தது. ஒப்பந்த காலம், தடுத்து வைத்தல் பணம், தாமதக் கட்டணம், முற்பணம் தொடர்பாக தகவல்கள் ஒப்பந்த உடன்படிக்கையில் அடங்கியிருக்காததுடன், திருத்த வேலைகள் 2016 மார்ச் 23 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆண்டின் போது பாதுகாப்பு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக பெறுகைகள் திட்டத்தில் ஒதுக்கியிருந்த தொகை ரூபா 1,900,000 தொகை ஆக இருந்ததுடன் அவற்றில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,600,000 தொகைக்கான 6 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருக்காத மற்றும் 2014 ஆண்டில் திட்டமிடப்பட்ட ரூபா 2,136,195 தொகை பெறுமதியான துளைகளை மூடும் இயந்திரமொன்று (Left casting machine) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்ததுடன், பாதுகாப்பு உபகரணங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மிகைத்து ரூபா 453,195 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 ஜுன் 09 திகதிய டீஎம்ஏ/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் காலாண்டிற்கு ஒன்று வீதம் நான்கு தடவைகள் நடாத்த வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது 02 குழுக்கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் செலவுகளிடையே 28 சதவீதம் முதல் 100 சதவீதம் இடைப்பட்ட வீச்சு ஒன்றில் கணிசமான முரண்கள் காணப்படாமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றான பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள்கள் தொடர்பாக குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுபாடு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் கட்டுப்பாடு | சொத்துக்கள் மற்றும் புத்தகங்களின் நன்கொடைகள் ஆவணப்படுத்தியிருக்காமை. |
| (ஆ) கணக்கீடு | (i) பேரேடுகள் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) பேரேடுகளை மற்றும் அட்டவணைகளிடையே இணக்கமின்மை காணப்படல். |
| | (iii) களஞ்சிய இருப்பு கட்டுப்பாட்டு பேரேடு பேணப்படாமை. |
| | (iv) இரத்து செய்யப்பட்ட காசோலை பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமை. |
| (இ) பெறுகை | (i) திட்டத்தின் பிரகாரம் செயற்படாமை. |
| | (ii) ஒப்பந்த பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) பண்டங்கள் கொள்வனவு செய்யும் கட்டளைகளின் பிரதிகள் அல்லது உடன்படிக்கைகள் கோவைளில் உட்படுத்தியிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முற்பணங்கள் | | முற்பணத் தொகையை தீர்ப்பனவு செய்யும் உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தப்பட்டு பதிவேடுகளிற்கு உட்படுத்துவதில் தாமதங்கள் காணப்பட்டமை. |
| (உ) | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணல் | (i) | 2018 அக்தோபர் 06 திகதியாகிய கணக்காய்வுத் திகதி அன்றும் 2015 ஆண்டிற்கான பேரேட்டு பதிவுகள் செய்திருக்காமை. |
| | | (ii) | 2016 மற்றும் 2017 ஆண்டுக்கான பேரேட்டுக் கணக்குகள் 2018 அக்தோபர் 01 திகதி வரை பேணப்பட்டிருக்காமை. |
| | | (iii) | 2015 அக்டோபர் 06 கணக்காய்வு சந்தர்ப்பம் வரை இரத்து செய்யப்பட்ட காசோலை பதிவேடு, பெறுமானத் தேய்வு ஒதுக்கம், அட்டவணை, கடன்கொடுத்தோர், கடன்பட்டோர் பதிவேடு, களஞ்சிய இருப்பு கட்டுப்பாட்டு பேரேடு, பெறுமதி கூடிய வரி பதிவேடு, வழங்குனர்கள் பதிவு செய்யும் பதிவேடு, ஒப்பந்த வேலை பதிவேடு, சேர்வு வைப்பு பதிவேடு, செலுத்தப்படாத சம்பளங்கள் பதிவேடு, செலுத்தப்படாத பணம் பதிவேடு ஆகிய ஏடுகள் பேணப்பட்டிருக்காமை. |